# தேவகோட்டை நகராட்சி

தேவகோட்டை நகராட்சி வளாகத்தில் அவ'ரக்கூட்டம் தனிஅலுவலரால் 08.07.2021ம் தேதி வியாழக்கிழமை காலை 11.00 மணிக்கு கூட்டம் நடைபெறவுள்ளது. அவ்வமயம் கீழ்கண்ட பொருட்கள் விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்படும்.

**பொருள்: 60**

தேவகோட்டை நகராட்சிக்கு சொந்தமான கீழ்க்காணும் குத்தகை உரிமையாணைகள் (லைசன்ஸ்) 01.08.2021 முதல் 31.08.2024 முடிய மூன்றாண்டு காலத்திற்கு அனுபவித்துக்கொள்ளும் உரிமைகளை பகிரங்க பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளிகள் மூன்றாண்டு காலத்திற்கு அனுபவித்துக்கொள்ளும் உரிமைகளை பகிரங்க பொதுஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளிகள் மூலம் ஒப்படைக்கவும் ஓராண்டு உரிமையாணைகள் மற்றும் இதர குத்தகை இனங்கள் குறித்த 2021–2024ம், ஆண்டுக்கான ஏல அறிக்கை மற்றும் அவ்வினங்களுக்காக தயாரிக்கப்பட்டுள்ள பொது கட்டுப்பாடுகள் மற்றும் சிறப்பு நிபந்தனைகள் ஒப்புதல் அளிக்கவும், ஏலம் மற்றும் ஒப்புந்தபுள்ளி அறிக்கை மற்றும்பொது கட்டுபாடு விதிகளை வெளியீடு செய்யவும் ஏல அறிக்கை மற்றும் மறு ஏலம்/மறு ஒப்பந்தப்புள்ளி அறிவிப்புகளை அவ்வப்போது நாளிதழ்களில் விளம்பரம் செய்யவும், அதற்கான செலவினங்களுக்கும் கீழ்கண்டவாறு நகர்மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**2021–2024ம் ஆண்டுக்கான ஏல அட்டவணை**

| வ. எண் | இனம் என் | உரிமையான விபரம் | காப்புத் தொகை ஒப்பந்தப்புள்ளி வைப்புத்தொகை | சால்வன்சி சான்றிதழ் தொகை | சொத்து பெருமான சான்றிதழ் இல்லையெனில் கூடுதல் காப்புத்தொகை ஒப்பந்தப்புள்ளி வைப்புத்தொகை | உரிமையாணை காலம் |
|---|---|---|---|---|---|---|
| 1. | 4 | நகராட்சி சாலைகளில் ஓரங்களில் உள்ள மரங்களின் மேற்பலன்களை மட்டும் அனுபவித்துக்கொள்ளும் உரிமம். | 2,000 | 2000 | 1000 | 01.08.2021 முதல் அல்லது ஒப்படைக்கும் நாள் முதல் 31.08.2024 வரை |
| 2. | 7 | பேருந்து நிலைய தொலைக்காட்சி பெட்டி | 30,000 | 20,000 | 20,000 | 01.08.2021 முதல் அல்லது ஒப்படைக்கும் நாள் முதல் 31.08.2024 வரை |
| **3.** | **11** | இராம்நகர் கட்டணக்கழிப்பறை வசூல் | **1,00,000** | **1,00,000** | **50,000** | 01.08.2021 முதல் அல்லது ஒப்படைக்கும் நாள் முதல் 31.08.2024 வரை |
| **4** | **5** | நகராட்சிக்கு சொந்தமான பேருந்து நிலையத்திற்கு வரும் பேருந்துகளுக்கு கட்டண வசூல் செய்து கொள்ளும் | **2,50,000** | **3,00,000** | **2,50,000** | 01.08.2021 முதல் அல்லது ஒப்படைக்கும் நாள் முதல் |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | உரிமம் | | | | 31.08.2024 வரை |
| 5 | 6 | கருதாவூரணி மீன்பிடித்தல் வசூல் உரிமம் | 10000 | – | 5000 | 01.08.2021 முதல் அல்லது ஒப்படைக்கும் நாள் முதல் 31.08.2024 வரை |

**அலுவலகக்குறிப்பு–**

1) 1 முதல் 5 முடிய உள்ள குத்தகை இனங்கள் 2021ம், ஆண்டு ஆகஸ்டு 2021 முதல் 2024 ஆம் ஆண்டு ஆகஸ்டு முடிய உள்ள காலம் அல்லது ஒப்படைக்கும் நாளிலிருந்து மூன்று ஆண்டுகளுக்கு மட்டும் உரிமம் காலமாகும். நஷ்டத்தை காரணம் காட்டி பின்வரும் ஆண்டுக்கு தொடர உரிமம் கோர உரிமையில்லை.
2) 2021–2024ம், ஆண்டிற்கு மேலே குறிப்பிட்டுள்ள குத்தகை இனங்கள் மூன்று ஆண்டுகளுக்கும் மட்டும் ஏலம்/ஒப்பந்தப்புள்ளி கோர அனுமதிக்கலாம்.
3) இக்குத்தகை இனங்கள் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளிக்குரிய விளம்பரங்கள் செய்வதற்கும் அதற்குரிய பிற செலவுகளுக்கும் மன்றம் அனுமதிக்கலாம்.
4) மேலே குறிப்பிட்ட அனைத்து இனங்களுக்கும் பொதுகட்டுப்பாடுகள் மற்றும் சிறப்பு நிபந்தனைகளை அனுமதிக்கலாம்.

**தீர்மான எண்: 60**

அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

## பொருள்: 61

தேவகோட்டை நகராட்சிக்கு சொந்தமான கருதாவூரணி மீன்பிடித்தல் மற்றும் பேருந்து நிலைய பஸ் கட்டண வசூல் ஆகிய இரண்டு இனங்களின் 2020–2021ம், ஆண்டு குத்தகைக்கு விடப்பட்டு குத்தகைதாரர்களால் கோவிட் –19, ஊரடங்கு காலம் தொடர்ந்து நீடிப்பு காரணமாக தொடர்ந்து நடத்த இயலாத சூழ்நிலையில் திரும்பி ஒப்படைக்கப்பட்டுள்ளது என்ற விபரம் மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**தீர்மான எண்: 61**

அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

## பொருள்: 62

நகராட்சி நிர்வாக மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசாணை நிலை எண்.92, நாள் 03.07.2007ன்படி, அனுமதியற்ற அனுபோகதாரர்களில் நேர்வில் ஒருமுறை மட்டுமே அளிக்கப்படும் சலுகை அடிப்படையில் குத்தகை உரிமம் அவர்களுடைய பெயரில் மாற்றித்தரலாம் என்று குறிப்பிட்டதன்படி, பேருந்து நிலைய தெற்கு பகுதியில் உள்ள கடை எண்.9–யினை, நடத்தி வரும் திரு.M.சேதுராமன் மற்றும் திருமதி.சிவகாமசுந்தரி, என்பவரும் கூட்டாக தொழில் செய்து வந்துள்ளனர். தற்போது தொடர்ந்து நடத்த இயலாததால் நாங்கள் கூட்டு தொழில் பலவீனம் செய்து கொண்டு விட்டேன் என தெரிவித்து வழங்கப்பட்ட மனுவின் பெயரில் பேருந்து நிலைய தெற்கு பகுதியில் அமைந்துள்ள கடை எண்.9, (வரிவிதிப்பு எண்.71009)யினை திரு. M.சேதுராமன் பெயரிலிருந்து, திருமதி.சிவகாமசுந்தரி பெயருக்கு மாற்றம் செய்ய மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்கக்குறிப்பு–**

1)மன்றம் அனுமதிக்கலாம்.

2)கடைவரிவிதிப்பினை பெயர் மாற்றம் செய்ய அரசாணையின்படி, விண்ணப்பத்தாரர் 12 மாதங்களுக்குரிய மாதந்திர குத்தகை தொகைக்கு சமமான தொகையை

முன்பணமாகச் செலுத்த வேண்டும். இது தவிர 12 மாதவாடகைக்கு சமமான தொகையை பெயர் மாற்றக் கட்டணமாகவும் செலுத்திடவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**தீர்மான எண்: 62**

அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

## பொருள்: 63

சிவகங்கை மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றிய லிட், கழனிவாசல் காரைக்குடி–2, அவர்களின் கடித ந.க.எண்.0274/வி.பி.I/2020–2, நாள்.15.10.2020ம் தேதிய கடிதத்தில் தேவகோட்டை நகராட்சி சங்கு ஊதும் இடம் அருகில் ஆவின் பாலகம் அமைக்க இடம் ஒதுக்கீடு செய்து தருமாறும் அவ்விடத்திற்கு இடவாடகை நிர்ணயம் செய்து தருமாறு கோரப்பட்டது. அதன் பேரில் சார்பதிவாளர் அவர்களின் வழிகாட்டுதல் மதிப்பு பெறப்பட்டதன் அடிப்படையில் தேவகோட்டை நகராட்சி சங்கு ஊதும் இடம் அருகில் ஆவின்பாலகம் 8 X 8 சதுரடியில் ஆவின்பாலகம் பெட்டி அமைக்க தரைவாடகை ரூ.3500/– என நிர்ணயம் செய்ய மன்றத்தின் அனுமதிற்கும், ஒப்புதலுக்கும்.

**அலுவலகக்குறிப்பு**– மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண்: 63**

அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

## பொருள்: 64

சிவகங்கை மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றிய லிட், கழனிவாசல் காரைக்குடி–2, அவர்களின் கடித ந.க.எண்.0274/வி.பி.I/2020–1, நாள்.04.02.2021ம், தேதிய கடிதத்தில் தேவகோட்டை நகராட்சி ராம் நகர் RDO Camp Office, (SMG Mahal) அருகில் ஆவின்பாலகம் அமைக்க இடம் ஒதுக்கீடு செய்து தருமாறும் அவ்விடத்திற்கு இடவாடகை நிர்ணம் செய்து தருமாறு கோரப்பட்டது. அதன் பேரில் சார்பதிவாளர் அவர்களின் வழிகாட்டுதல் மதிப்பு பெறப்பட்டதன் அடிப்படையில் தேவகோட்டை நகராட்சி ராம்நகர் RDO Camp Office, (SMG Mahal) அருகில் 8 X 8 சதுரடியில் ஆவின்பாலகம் பெட்டி அமைக்க தரைவாடகை ரூ.3000/– என நிர்ணயம் செய்ய மன்றத்தின் அனுமதிற்கும், ஒப்புதலுக்கும்.

**அலுவலகக்குறிப்பு**– மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண்: 64**

அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

## பொருள்: 65

இந்நகராட்சி அலுவலகத்திற்கு தினமலர், தினத்தந்தி, தினகரன், தமிழ் இந்து மற்றும் ஆங்கிலம் இந்து, தினத்தந்தி, தினமலர் நாளிதழ்கள் விநியோகம் செய்த வகையில் ஜனவரி 2021 முதல் ஜுன் 2021 மொத்தம் தொகை ரூ.6330/– திரு.M.கருணாநிதி, திருமதி A.வள்ளி ஆகிய விநியோகஸ்தர்களுக்கு காலம் கடந்த வகையில் பட்டியலின்படி, நகராட்சி வருவாய் நிதியிலிருந்து வழங்கிட மன்றம் அனுமதிக்கலாம்.

**அலுவலகக்குறிப்பு** – மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண்: 65**

அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

## பொருள்: 66

தேவகோட்டை நகராட்சி 2021–2022–ம் ஆண்டுக்கான பொது வரவு செலவு திட்டம் மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

<u>**அலுவலகக்குறிப்பு**</u> – மன்றம் அனுமதிக்கலாம்.

## <u>தீர்மான எண்: 66</u>

அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

## <u>பொருள்: 67</u>

தேவகோட்டை நகராட்சி பொது சுகாதாரப்பிரிவின் கீழ் இந்நகராட்சி பகுதிகளில் கொரானோ வைரஸ் காய்ச்சல் தடுப்பு நடவடிக்கை மேற்கொள்ள நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அவர்களின் அறிவுரையின்படி இனிவரும் காலங்களில் கொரோனா வைரஸ் காய்ச்சல் அதிகளவில் பரவா வண்ணம் தடுக்கும் பொருட்டு தடுப்பு பணிக்கு தேவையான அத்தியாவசிய பொருள்களான கீழ்காணும் பொருள்கள் வாங்கி இருப்பில் வைக்க அறிவுறுத்தியதன்படி மேலும் மூன்றாவது அலையினை எதிர்கொள்ளும் பொருட்டு நடடிவக்கை மேற்கொள்ள அறிவுறுத்தியதின்படி

1) முககவசங்கள் (3 PLY Mask) – 20,000 எண்ணம்
2) கபசுர குடிநீர் பவுடர் – 200 கிலோ
3) லைசால் – 2500 லிட்டர்

மேற்குறிப்பிட்ட விபரப்படி கொரோனா தடுப்பு நடவடிக்கைக்கு தேவையான கிருமிநாசினிகள் மற்றும் முககவசங்கள் வாங்கி இருப்பில் வைக்கவும், மேற்காணும் பணி பொது சுகாதார பணி என்பதால் பொதுமக்களின் பொது சுகாதார நலனை கருத்தில் கொண்டும் பணியின் அவசர அவசியம் கருதியும் உடன் விலைப்புள்ளி பெற்று பணி மேற்கொள்ளவும், அதற்காகும் செலவீனம் துப்பரவு ஆய்வாளர் அவர்களின் குறிப்பின்படி ரூ.10,00,000/–த்திற்கான செலவு மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>**அலுவலகக்குறிப்பு –**</u>

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) மேற்காணும் செலவீனத்தை நகராட்சி பொதுநிதியின் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

இ) விலைப்புள்ளி பெற்று பணி மேற்கொள்ளவும் குறைந்த விலைவிகிதம் வழங்கிய நிறுவனத்திற்கு விநியோக உத்தரவு வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

## <u>தீர்மான எண்: 67</u>

அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

## <u>பொருள்: 68</u>

தேவகோட்டை நகராட்சியில் குடிநீர் மற்றும் வடிகால் நிதி 2020–2021 – ன் கீழ் மன்றத்தால் நிர்வாக அனுமதி பெறப்பட்ட கீழ்கண்ட பணிக்கு 30.06.2021 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டத்தில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் தனி அலுவலரின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு ரூ (லட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் | விலைவிகிதம் மதிப்பீட்டை விட |
|---|---|---|---|---|
| 1 | தேவகோட்டை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.1, முதல் 14 வரை உள்ள பகுதிகளில் மழைநீர் வடிகால் அமைத்தல் பணி. | 9.90 | 1) திரு C. ரமேஷ் முருகன் | 0.11% குறைவு |
| | | | 2) திரு T.பாண்டி | 2.08% அதிகம் |
| 2 | தேவகோட்டை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.15 முதல் 27 வரை உள்ள பகுதிகளில் மழைநீர் | 9.50 | 1) திரு C. ரமேஷ் முருகன் | 0.14% குறைவு |
| | | | 2) திரு T.பாண்டி | 5.07% அதிகம் |

| | | | | |
|---|---|---|---|---|
| | வடிகால் அமைத்தல் பணி. | | | |

**<u>அலுவலகக்குறிப்பு–</u>** பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளியில் மேற்கண்ட விபரப்படி மதிப்பீட்டை விட குறைவாக கொடுத்த ஒப்பந்ததாரர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்கலாம்.

**<u>தீர்மான எண்: 68</u>**

அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

## <u>பொருள்: 69</u>

தேவகோட்டை நகராட்சியில் பொதுநிதி **2020–2021 –** ன் கீழ் மன்றத்தால் நிர்வாக அனுமதி பெறப்பட்ட கீழ்கண்ட பணிக்கு **30.06.2021** அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டத்தில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் தனி அலுவலரின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு ரூ (லட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் | விலைவிகிதம் மதிப்பீட்டை விட |
|---|---|---|---|---|
| 1 | தேவகோட்டை நகராட்சி வளாகத்தில் நகராட்சி ஈப்பு மற்றும் இருசக்கர வாகனங்கள் நிறுத்துமிடம் அமைத்தல் பணி. | 7.00 | 1) திரு C. ரமேஷ் முருகன் | 0.10% குறைவு |
| | | | 2) திரு T.பாண்டி | 3.45% அதிகம் |

**<u>அலுவலகக்குறிப்பு–</u>** பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளியில் மேற்கண்ட விபரப்படி மதிப்பீட்டை விட குறைவாக கொடுத்த ஒப்பந்ததாரர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்கலாம்.

**<u>தீர்மான எண்: 69</u>**

அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

## <u>பொருள்: 70</u>

தேவகோட்டை நகராட்சி பகுதியான இராம்நகர் பகுதியில் ஆணையாளர் குடியிருப்பு உள்ளது. இக்குடியிருப்பு வளாகத்தில் சுற்றுசுவர் உயரம் குறைவாக உள்ளதால் பாதுகாப்பு இல்லாமலும் அன்னியர்கள் உள்ளே வர வாய்ப்புகள் உள்ளது. அதனால் பாதுகாப்பை கருத்தில் கொண்டு சுற்றுசுவர் உயரப்படுத்துவது அவசியமாகிறது. மேலும் ஆணையாளர் குடியிருப்பில் பணி பார்க்கும் காவலருக்கு போதிய காவலர் அறை மற்றும் கழிப்பிட வசதி இல்லாமல் உள்ளது. அதனால் மழைக்காலங்களில் தங்குவதற்கு மிகவும் சிரமமாக உள்ளது. எனவே சுற்று சுவர் உயரப்படுத்தி காவலர் அறை அமைக்க தயார் செய்யப்பட்ட மதிப்பீடு தொகை **ரூ.9.80** இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:–** அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) மேற்காணும் பணிக்கான செலவீனத்தை பொதுநிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>தீர்மான எண்: 70</u>**

அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

## <u>பொருள்: 71</u>

தேவகோட்டை நகராட்சி பொதுசுகாதாரப் பிரிவின் கீழ் இயங்கி வரும் திடக்கழிவு மேலாண்மை திட்டப்பணிகள் **2018–19**–ன் கீழ் குப்பைகளை பிரித்து பெறுவதற்கு புதியதாக **26** மின்கல வாகனங்கள் வாங்கி மேற்படி பணிக்கு பயன்படுத்தப்பட்டு வந்தது. இந்நிலையில் மேற்படி BOV வாகனங்கள் முறையான பராமரிப்பு மற்றும் பழுதுகளை சரிசெய்ய சரியான பழுது நீக்குநர் இல்லாததாலும் மேற்படி BOV வாகனங்கள்பழுதடைந்து பயன்படுத்த இயலாத நிலையில் உள்ளது. இதனால் மேற்படி குப்பைகளை சேகரம் செய்யும் பணி பாதிப்படைகின்றது. எனவே மாவட்ட ஆட்சியர் சிவகங்கை அவர்களின் ஆய்வுக்கூட்டம் **19.06.2021**–ல் தெரிவித்துள்ளபடி வாகனங்களை சரியான முறையில் பராமரிக்கவும் தற்போது இயக்கத்தில் உள்ள **6** BOV

வாகனங்கள், புதியதாக வாங்கப்பட்ட 3 BOV வாகனங்கள் மீதமுள்ள 12 BOV வாகனங்கள் ஆக மொத்தம் 21 BOV வாகனங்கள் உள்ள பழுதுகளை நீக்கம் செய்வதற்கும், வாகனங்களில் உள்ள பேட்டரி சார்ஜ் செக்கப், டிஸ்டில்டு நீர் செக்கப், அனைத்து வீல்கள் செக்கப், எலக்ட்ரிக்கல் அயிட்டம், மெயின் பிரேக், மற்றும் கை பிரேக் போன்றவைகளை தினசரி செக்கப் செய்து வாகனத்தில் உள்ள சிறுசிறு பழுதுகளை அவ்வப்போதே மாற்றிடவும் வாகனத்தை வாரம் ஒருமுறை சுத்தம் செய்து பராமரிப்பு செய்வதற்கு வருடாந்திர அடிப்படையில் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள துப்புரவு ஆய்வாளரின் குறிப்பின்படி வருடாந்திர பராமரிப்பு செலவு உத்தேச செலவீனம் ரூ.3,55,000/—க்கு செலவு மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:—** அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) மேற்படி செலவீனம் பொதுநிதியின் கீழ் செலவு மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண்: 71**

அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**பொருள்: 72**

தேவகோட்டை நகராட்சி பொதுப்பிரிவு, வருவாய் பிரிவு மற்றும் கணிணி வசூல் மையம் ஆகிய பிரிவுகளில் உள்ள கணிணிகளுக்கு மின்சாரம் தடைபடும் சமயங்களில் தொய்வு ஏற்படாமல் தொடர்ந்து செயல்பட UBS Battery – 150 AH – 2 Nos. பொருத்தப்பட்டுள்ளது. இந்த UBS Battery பொருத்தப்பட்டு 5 வருடங்களுக்கு மேல் ஆகிவிட்டதாலும் தொடர் இயக்கத்தாலும் பழுதடைந்துள்ளது. இதனால் அலுவலக கணிணிகளை மின் தடை நேரங்களிலுல் தொடர்ந்து இயக்க முடியாத சூழ்நிலை உள்ளது. ஏனவே UBS Tubular Battery – 150 AH – 2 Nos. சாதனத்தை புதியது வாங்கி பயன்படுத்த வேண்டி மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:—**

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) மேற்காணும் பணிக்கான செலவீனத்தை பொதுநிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண்: 72**

அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**பொருள்: 73**

தேவகோட்டை நகராட்சி பொதுசுகாதாரப் பிரிவின் கீழ் தூய்மை இந்தியா திட்டத்தின் மூலம் திடக்கழிவு மேலாண்மை திட்டப்பணிகள் நடைபெற்று வருகின்றன. திடக்கழிவு மேலாண்மை திட்டப்பணிகள் 2018—19—ன் கீழ் இந்நகராட்சியில் 26 மின்கல வாகனங்கள் வாங்கி அதன் மூலம் இந்நகரில் உள்ள வீடுகளில் தூய்மை பணியாளர்கள் மூலம் குப்பைகளை மக்கும் குப்பையாகவும், மக்காத குப்பையாகவும் தரம் பிரித்து சேகரிக்கப்பட்டு வந்தது. இந்நிலையில் தற்போது 20 BOV வாகனங்கள்பழுதடைந்து பயன்படுத்த முடியாத நிலையில் உள்ளது. இதனால் குப்பைகளை தரம் பிரித்து பெறும் திடக்கழிவு மேலாண்மை பணிகள் மற்றும் பொதுசுகாதாரப் பணிகள் மிகவும் பாதிப்படைகின்றன. மேலும் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் ஆய்வுக்கூட்டத்தில் தெரிவித்துள்ளவாறு இந்நகராட்சி பகுதிகளில் திடக்கழிவு மேலாண்மை திட்டப்பணிகள் தொய்வின்றி நடைபெற பழுதடைந்த வாகனங்களில் 12 BOV வாகனங்களின் பழுதுகளை சரிசெய்ய துப்புரவு ஆய்வாளரின் குறிப்பின்படி உத்தேச செலவீனம் ரூ.9,90,000/—த்திற்கு செலவீனம் மேற்கொள்ளவும், பொதுமக்களின் பொதுசுகாதார நலன் கருதியும் பணியின் அவசர அவசியம் கருதியும் பணி மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:—**

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ)மேற்காணும் பணிக்கான செலவீனத்தை பொதுநிதியின் கீழ் செலவு மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

இ) மேற்காணும் பணிக்கு விலைப்புள்ளி பெற்று மேல்நடவடிக்கை தொடர மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண்: 73**

அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**பொருள்: 74**

தேவகோட்டை நகராட்சி பொதுசுகாதாரப் பிரிவின் கீழ் 27 வார்டு பகுதிகளில் துாய்மை பணிகள் மேற்கொள்வதில் உற்பத்தியாகும் 13.50 மெ.டன் குப்பை கழிவுகளில் மக்கும் குப்பைகளை நூண்ணுயிர் உரமாக்கல் மையத்திற்கும் மீதமுள்ள மக்காத பிளாஸ்டிக் குப்பை கழிவுகளை இந்நகராட்சிக்கு சொந்தமான ரஸ்தா உரக்கிடங்கிற்கும் எடுத்து சென்றும் கொட்டப்பட்டு வருகிறது. இந்நிலையில் நாளுக்கு நாள் குப்பை கழிவுகள் அதிக அளவில் உரக்கிடங்கில் தேக்கமைடந்து வருகிறது. இதன் காரணமாக குப்பை லாரிகள் உள்ளே செல்ல இயலாமல் உள்ளது. ஆகையால் இந்நகராட்சி பகுதிகளில் திடக்கழிவுகள் அங்காங்கே தேக்கமடைந்து சுகாதார சீர்கேடு ஏற்படும் நிலையில் உள்ளது. மேலும் தற்போது கொரோனா வைரஸ் காய்ச்சல் பரவி வருவதாலும் பொதுமக்களின் பொதுசுகாதார நலனை கருத்தில் கொண்டு ரஸ்தா உரக்கிடங்கில் உள்ள குப்பை கழிவுகளை JCB இயந்திரம் மூலம் அப்புறப்படுத்தி சுத்தம் செய்ய பணியின் அவசர அவசியம் கருதி உடன் விலைப்புள்ளி பெற்று பணி மேற்கொள்ளவும், அதற்காகும் உத்தேச செலவீனம் ரூ.1,00,000/—த்திற்கு செலவு மேற்கொள்ளவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:—**

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) பணிக்கான செலவீனத்தை பொதுநிதியின் கீழ் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

இ) உடன் விலைப்புள்ளி பெற்று நடவடிக்கை தொடர மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண்: 74**

அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.